**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
- - - - -

# IN THE COURT OF THE SESSIONS JUDGE, MAHALIR NEETHIMANDRAM, MADURAI.

| | | |
|---|---|---|
| **Case No.** | **:** | **SC NO. 126 / 2018** |
| **Deposition of witness for** | **:** | **PW : 3** |
| **Name** | **:** | **திருமதி. கலைச்செல்வி** |
| **Father's / Husband's Name** | **:** | |
| **Village** | **:** | |
| **Taluk** | **:** | |
| **Caste** | **:** | |
| **Calling** | **:** | |
| **Religion** | **:** | |
| **Age** | **:** | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **05.10.2023**

எதிரி 1 ஆஜர். எதிரிகள் 2 முதல் 4 ஆஜரில்லை. பிரிவு 317 குவிமுச கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

**குறுக்கு விசாரணை (1 வது எதிரி தரப்பில்) :**

நான் M.Sc., M.Phil (Electronics) படித்துள்ளேன். நான் 2005 ம் ஆண்டு M.Sc., படிப்பை முடித்தேன். எனக்கு 2006 ம் ஆண்டு திருமணம் நடந்தது. திருமணத்திற்கு முன்பு Mphil முதலாம் ஆண்டு படித்தேன். திருமணத்திற்குப் பிறகு 2 ம் ஆண்டு படித்தேன். எங்கள் திருமணம் பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்ட திருமணம் ஆகும். திருமணத்திற்கு எனக்கு 100 பவுன் நகை போட்டார்கள். எனது கணவருக்கு 10 பவுன் நகை போட்டார்கள். வெள்ளி பாத்திரங்கள் ஒரு கிலோ கொடுத்தார்கள். ரொக்கப்பணம் கொடுக்கவில்லை. எனக்கு நகை போட்டது, வெள்ளி பாத்திரங்கள் கொடுத்தது, சீர் வரிசைகள் கொடுத்தது எல்லாம் எங்கள் குல வழக்கப்படி என் பெற்றோரின் விருப்பப்படி செய்தார்கள் என்றால் சரிதான். எனது கணவர் வீட்டில் இருந்து எதையும் கேட்டு அதற்காக எதுவும் கொடுக்கப்படவில்லை என்றால் சரிதான். எனது கணவர் B.E (EEE) படித்து

முடித்து விட்டு software company யில் engineer ஆக சென்னையில் வேலை பார்த்து வருகிறார். திருமணம் ஆனதில் இருந்து நானும் என் கணவருடன் தான் சென்னையில் வசித்து வருகிறேன். எங்களுக்கு 2 பெண் குழந்தைகள் உள்ளது. நான், எனது அக்கா அனைவரும் மதுரையில் தான் படித்தோம் என்றால் சரிதான். நானும் என் அக்காவும் ஒருவருக்கு ஒருவர் உதவியாக இருப்போம் என்றால் சரிதான். என் அக்கா நன்றாக ஆங்கிலம் பேசுவார், எழுதுவார் என்றால் சரிதான். அதசாஆ.3 ல் இரண்டு காகிதங்கள் உள்ளது என்றும் இரண்டும் ஒரே மாதிரியாகத்தான் உள்ளது என்றால் சரிதான். அந்த இரண்டு காகிதங்களையும் நான் முதன் முதலில் எங்கு வைத்து எந்த தேதியில் எந்த நேரத்தில் பார்த்தேன் என்றால் 19.01.2010 ம் தேதியன்று எங்கள் வீட்டில் வைத்து பார்த்தேன். நேரம் ஞாபகம் இல்லை. அதசாஆ.3 ல் உள்ள 2 காகிதங்களும் எனது அக்கா பயன்படுத்தும் hand bag ல் இருந்தது. அதை எங்கள் வீட்டின் எந்த இடத்தில் வைத்து பார்த்தேன் என்று ஞாபகம் இல்லை. நான் பார்க்கும் போது எனது அக்காவின் hand bag ஐ யார் என்னிடம் கொடுத்து நான் பாத்தேன் என்றால் நான் மறுநாள் வீட்டை clean செய்யும் போது நானாகப் பார்த்தேன். அந்த hand bag எந்த இடத்தில் இருந்தது என்று எனக்கு ஞாபகம் இல்லை. நான் பார்க்கும்போது அங்கு போலிசார் இல்லை. போலிசார் என்னை முதன் முதலில் எங்கு வைத்து எத்தனை மணிக்கு, என்னை விசாரணை செய்தார்கள் என்றால் 19..01.2010 ம் தேதியன்று RDO அலுவலகத்தில் வைத்து விசாரித்தார்கள். நேரம் ஞாபகம் இல்லை. அதற்கு முன்னால் என்னை போலிசார் விசாரிக்கவில்லை. என்னை இந்த வழக்கு சம்பந்தமாக RDO விசாரணை செய்யவில்லை. உதவி ஆணையர் என்னை விசாரித்தார். RDO அலுவலகத்தில் RDO இருந்தாரா என்றால் ஞாபகம் இல்லை. உதவி ஆணையர் என்னை விசாரித்தபோது என்னுடன் என் அம்மா, அப்பா, மற்ற சாட்சிகள் உடன் இருந்தார்களா என்றால் இல்லை. என் கணவர் மட்டும் தான் உடன் இருந்தார். என் கணவர் தான் என்னை வீட்டில் இருந்து RDO அலுவலகத்திற்கு அழைத்துச் சென்றார். அப்போது என் அப்பா, அம்மா என்னுடன் RDO அலுவலக்திற்கு

வந்தார்களா என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. அவர்கள் வீட்டில் இருந்தார்களா என்று ஞாபகம் இல்லை. எங்கள் வீட்டில் இருந்து hand bag உடன் RDO அலுவலகத்திற்குச் செல்லவில்லை. அதசாஆ.3 ல் உள்ள 2 பேப்பர்களை மட்டும் எடுத்துச் சென்றேன். எனது அக்காவின் Hand bag வீட்டில் தான் இருந்தது. எனது அக்காவின் hand bag ல் அதசாஆ.3 2 காகிதங்களைத் தவிர வேறு பொருட்கள் எதுவும் இருந்ததா என்றால் இல்லை. உதவி ஆணையர் அதசாஆ.3 ல் உள்ள 2 காகிதங்களையும் வைத்து என்னை விசாரித்தாரா என்றால் இல்லை. நான் படித்த காலத்தில் எழுதிய நோட்டு புத்தகங்கள் எல்லாம் என்னிடம் உள்ளது. நான் படித்த காலத்தில், நான் எழுதிய நோட்டுப் புத்தங்களையோ, அல்லது மாதிரி கையொப்பத்தையோ போலிசார் வாங்கவில்லை. நான் கொடுத்த வாக்குமூலத்தில் கையெழுத்து மட்டும் வாங்கினார்கள். நான் சொன்னது போல் எதுவும் நடக்கவில்லை என்றால் சரியல்ல. நான் சொன்னது போல் நான் வீட்டை சுத்தம் செய்யும் போது எனது சகோதரியின் Hand bag ஐ எடுக்கவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. அந்த கைப்பையில் அதசாஆ.3 ஆக குறியீடு செய்யப்பட்ட இரண்டு காகிதங்களும் இருந்தது என்று சொல்வது பொய் என்றும் சொன்னால் சரியல்ல. அதசாஆ.4 நோட்டு புக்கு போன்ற நோட்டு புக்குகள் நான் படித்த காலத்திலும் பயன்படுத்தியுள்ளேன். அதசாஆ.,4 ஐ நான் முதன் முதலில் எங்கு வைத்து பார்த்தேன் என்றால் எனது அக்காவின் Note க்களோடு இதுவும் இருந்தது. ஆனால் அதை நீதிமன்றத்தில் தான் பார்க்கிறேன் என்றால் சரிதான். அதசாஆ.3, 4 ஆகியவை பின்னிட்டு இந்த வழக்கிற்காக என்னையோ, என் சகோதரரையையோ வைத்து வழக்கிற்காக தயாரிக்கப்பட்டிருக்கிறது என்றும் அதில் உள்ள கையெழுத்துக்கள் எதுவும் என்னுடைய சகோதரியின் கையெழுத்துக்கள் இல்லை என்றும் எனது பெற்றோரைக் காப்பாற்ற வேண்டும் என்பதற்காக அதசாஆ.3,4 ஆவணங்கள் தயாரிக்கப்பட்டு, சொல்லிக்கொடுத்து நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது திருமணத்தின் போது, எதிரி அவரது வீட்டின் சார்பாக நெக்லஸ், வளையல் ஆகியவை பரிசாகக் கொடுக்கப்பட்டது என்றால்

இல்லை. எனது திருமணத்திற்கு முன்பே எனது சகோதரிக்கு திருமணம் நடைபெற்றது. எனது சகோதரியின் திருமணத்திற்கு நான் பரிசு பொருட்கள் எதுவும் கொடுக்கவில்லை. எனது திருமணத்தின்போது, எதிரி நகைகளை பரிசாகக் கொடுத்தார் என்றும் தற்போது வழக்கிற்காக மறைக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சென்னையில் இருந்த போது, எனது சகோதரி மதுரையில் என் பெற்றோருடன் இருந்தார் என்றால் சரியல்ல. சில நாட்கள் பெங்களூரில் இருந்தார். மற்ற பொழுது மதுரையில் எங்கள் பெற்றோர் வீட்டில் இருந்தார். 2008 ம் ஆண்டு முதல் என் சகோதரி மதுரையில் உள்ள எங்கள் பெற்றோருடன் தான் இருந்தார் என்றால் சரிதான். சென்னைக்கும் மதுரைக்கும் இடையே சுமார் 423 கிமீ தூரம் இருக்கும். சென்னைக்கும் பெங்களூருக்கும் இடையே சுமார் 380 முதல் 400 கிமீ தூரம் இருக்கும். சரியாகத் தெரியவில்லை. நான் சென்னையில் இருக்கும்பொழுதெல்லாம், என் பெற்றோரிடமும், சகோதரியிடமும் போன் மூலம் பேசிக்கொள்வேன். அவ்வாறு போன் மூலம் பேசும்போது தான் என் சகோதரி குறித்தும் அவரது நிலை மற்றும் வழக்குகள் குறித்தும் தெரிந்து கொண்டேன் என்றால் சரியல்ல. போனிலும், நேரிலும் பார்க்கும்போதும் கேட்டு தெரிந்து கொண்டேன். மதுரைக்கு வந்து சென்றதற்கான டிக்கெட்டுகள் கைவசம் உள்ளதா என்றால் IRCTC website ல் online மூலம் தான் டிக்கெட் பதிவு செய்வோம். எனது அக்காவின் திருமணத்திற்குப் பிறகு நான் சென்னையிலிருந்து மதுரைக்கு எப்பெப்போது வந்தேன் என்று குறிப்பிட்டு என்னால் சொல்ல இயலாது என்றால் சரிதான். என்னை போலிசார் விசாரித்த போது, இந்த வழக்கு சம்பந்தமாக ஆவணங்கள் எதுவும் இருக்கிறதா என்று கேட்டார்களா என்றால் கேட்கவில்லை. நானும் போலிசாரிடம் எந்த ஆவணங்களையும் கொடுக்கவில்லை. என் அக்காவிற்கு மருத்துவம் செய்து கொண்டது பற்றியும் அதற்கான காரணங்கள் குறித்து எனக்கு நேரடியாகத் தெரியாது என்றும் என் அப்பா சொல்லித்தான் எனக்குத் தெரியும் என்றால் சரியல்ல. மருத்துவ Bills களைப் பார்த்துத் தெரிந்து கொண்டேன். அந்த Bills களை எல்லாம் நான் வீட்டை சுத்தம் செய்த போதுதான் பார்த்தேனா என்றால் இல்லை. அதற்கு

முன்பே பார்த்தேன். நான் வீட்டை சுத்தம் செய்வதற்கு முன்பு எப்போது பார்த்தேன் என்றால் சம்பவத்திற்கு 2,3 வருடங்களுக்கு முன்பு பார்த்தேன். எனது அக்காவின் வங்கி கணக்கோ, bank statement எனக்கு தரப்படவில்லை. Debit card பயன்படுத்தினால் அதற்கு statement இருக்கும் என்றால் சரிதான். என் அக்கா வருமானவரி செலுத்துபவரா என்றால் எனக்குத் தெரியாது. கோர்ட்டில் கவுன்சிலிங் பேசிய விபரம் பற்றி எனக்கு நேரடியாகத் தெரியாது. நான் சொன்னது போல் எதுவும் நடக்கவில்லை என்றும் நான் சொன்னது போல் போன் மூலமோ, நேரடியாகவோ என் அக்கா குறித்து எந்த தகவலும் பெறவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. எனது செல்போன் எண், என் கணவரின் செல்போன் எண், என் அக்காவின் செல்போன் எண், எங்கள் வீட்டு உறவினர்களின் செல்போன் எண் ஆகியவற்றை போலிசார் கேட்டு வாங்கிக்கொண்டார்களா என்றால் ஞாபகம் இல்லை. என் தம்பி 2012 ம் வருடம் திருமணம் செய்து கொண்டார். எனது தம்பிக்கு எங்கள் ஜாதியில் தான் பெண் எடுக்கப்பட்டது. என் தம்பி, என் அக்காவுடன் வசித்துவந்த காலத்தில் எந்தப் பெண்ணையாவது காதலித்தாரா என்றால் இல்லை. என் தம்பி ஒரு பெண்ணை காதலித்து வந்தார் என்றும் அந்த பெண் எங்கள் இணத்தைச் சேர்ந்தவர் இல்லை என்பதால் எங்களுக்குள் பிரச்சனைகள் இருந்தது என்றும் அதனால் என் அக்காவின் மனம் பாதிக்கப்பட்டிருந்தது என்றும் அதை நான் மறைக்கிறேன் என்றால் சரியல்ல. என் அக்கா மருந்து எதுவும் சாப்பிடவில்லை. என் அக்கா மனநோய்க்காக மருந்து சாப்பிட்டு வந்தார் என்றும் அதையும் நான் மறைக்கிறேன் என்றால் சரியல்ல. என்னை RDO விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தார் என்றும் அதில் நான் கையெழுத்திட்டேன் என்றும் தற்போது வழக்கிற்காக அதை மறைக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

அமர்வு நீதிபதி,
மகளிர் நீதிமன்றம்,மதுரை